Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 30-10-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

**Kadaibogam Potato to Fetch Better Prices**

India produced 447 lakh tonnes of potato from an area of 19.65 lakh hectares in 2012-13. Uttar Pradesh, West Bengal, Bihar, Assam, Madhya Pradesh, Punjab and Gujarat accounted for 85 per cent share in total area and production in 2012-13 in India. The area and production of potato were 4860 hectares and 97,200 tonnes, respectively in Tamil Nadu during 2012-13 according to the statistics given by National Horticultural Research and Development Foundation (NHRDF). In Tamil Nadu in 2012-13 area and production decreased by 1 per cent and 7 per cent, respectively compared to 2011-12. India has exported about 1.14 lakh tonnes of potato in 2012-2013, which is 13 per cent more than that of 2011-12.

In Tamil Nadu, potato is grown in the hilly regions of Dindigul, Nilgiris and also in the plains of Krishnagiri and Erode districts. In Kadaibogam season, it is sown in the months of September and October and harvested from December to January. Before sowing, farmers are eager to know about the prices of Kadaibogam potato in order to take up their sowing decisions. There are two major varieties, viz., Kufri Jyoti and Kufri Giriraj grown in Nilgiri district. Nilgiri potato is traded to Chennai, Coimbatore, Madurai, Trichy, Salem and Vellore and also to other States (Kerala).

Nilgiri potatoes are considered as the best ones because of its taste, hardness and higher shelf-life. Hence it fetches higher price. Potatoes coming from Karnataka and Uttar Pradesh are stored and used for seed purpose. Nilgiris potatoes are used up to 95 per cent for food purpose and 5 percent for chips making.

The NAIP – Domestic and Export Market Intelligence Cell (DEMIC) functioning in Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analyzed the 10 years (2004-2013) prices of potato prevailed in Nilgiris Co-operative Marketing Societies (NCMS), Mettupalayam. The econometric analysis and market surveys revealed that farmers could get a price of Rs.16 to 18 per kg of potato during harvest period (December, 2013 January, 2014). Based on this price, it is advised to take potato sowing kadaibogam season.

**For further details contact:**


Domestic and Export Market Intelligence Cell (DEMIC)
Centre for Agricultural and Rural Development Studies
Tamil Nadu Agricultural University
Coimbatore-641 003
Phone - 0422-2431405


**For Technical Details please contact:**


Dr.N.Selvaraj,
Professor and Head,
Horticultural Research Station,
Vijayanagaram,
Udhagamandalam - 643,001.
Phone: 0423-2442170.
Cell: 94430 52219.


Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30-10-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**கடைபோக உருளைக் கிழங்கிற்கு நல்ல விலை கிடைக்கும்**

இந்தியாவில் உருளைக்கிழங்கு 2012-13ல் 19.65 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 447 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவின் மொத்த உருளைக்கிழங்கின் பரப்பு மற்றும் உற்பத்தியில் உத்திரப்பிரதேசம், மேற்குவங்காளம், பீகார், அசாம், மத்திய பிரதேசம், பஞ்சாப், மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் 85 சதவீதம் பங்களிக்கின்றன. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின்படி, 2012-13ல் தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு 4,860 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 97,200 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. தமிழ்நாட்டில் பரப்பு மற்றும் உற்பத்தி முறையே 1 சதவீதம் மற்றும் 7 சதவீதம் கடந்த ஆண்டை (2011-2012)க் காட்டிலும் இந்த ஆண்டு குறைந்து உள்ளது. இந்தியாவிலிருந்து 2012-13ல் 11.14 இலட்சம் டன்கள் உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 13 சதவீதம் அதிகமாகும்.

தமிழ்நாட்டில் நீலகிரி, திண்டுக்கல், கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது. கடைபோக உருளைக்கிழங்கு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதத்தில் விதைப்பு செய்து டிசம்பர் மற்றும் ஜனவரி மாதத்தில் அறுவடை செய்யப்படுகிறது. விவசாயிகள் கடைபோக விதைப்பு முடிவுகளை எடுப்பதற்கு உருளைக்கிழங்கு அறுவடையின்போது கிடைக்கும் விலை நிலவரம் பற்றி தெரிந்து கொள்ள ஆவலாக உள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் முக்கிய இரண்டு இரகங்களான குப்ரி ஜோதி மற்றும் குப்ரி கிரிராஜ் பயிரிடப்படுகின்றன. நீலகிரி உருளைக்கிழங்கு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் வேலூர் ஆகிய சந்தைகளிலும் மற்றும் கேரளாவிலும் அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது.

நீலகிரி உருளைக்கிழங்கு தரமானதாக கருதப்படுவதற்கு காரணம் அதனுடைய சுவை, கடினத்தன்மை மற்றும் நீண்ட காலம் சேமிக்கும் தன்மை ஆகும். இதனால் சந்தையில் நல்ல விலை கிடைக்கிறது. கர்நாடகா மற்றும் உத்திரப்பிரதேசத்தில் இருந்து வரும் கிழங்குகள் சேமித்து வைக்கப்பட்டு விதைக் கிழங்குகளாகப்

பயன்படுத்தப்படுகிறது. நீலகிரி உருளைக் கிழங்கு 95 சதவீதம் உணவு வகைகளுக்கும், 5 சதவீதம் சிப்சிற்கும் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் கடந்த 10 ஆண்டு (2004-2013) மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலவிய உருளைக்கிழங்கு விலையை ஆய்வு செய்தது. அதன்படி, கடைபோக உருளைக்கிழங்கு அறுவடையின் போது (டிசம்பர் 2013, ஜனவரி 2014) கிலோவிற்கு ரூ.16முதல் ரூ.18 வரை விலை கிடைக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்விலையைக் கருத்தில் கொண்டு கடைபோக உருளைக்கிழங்கை சாகுபடி செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003,
தொலைபேசி- 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ள:</u>

முனைவர். என். செல்வராஜ்
பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்
விஜயநகரம்,
உதகமண்டலம்-643001.
தொலைபேசி: 0423-2442170
கைப்பேசி: 94430 52219.

மக்கள் தொடர்பு அலுவலர்